4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

MCOP No. 35/2022 நாள்: 01.09.2025 ம.சா.2 – ரவி

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. மனுதாரர் கமலாத்தாள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்தேன். அவர் எப்படி சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொன்னாரோ அதனடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு நான் உறவினரல்ல. சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்களை நான் சொல்லிதான் தயாரித்தார்கள். 31.10.2019 அன்று விபத்து நடந்தது. கார் வேகமாக மோதியதால் சத்தம் வந்தது. விபத்தினால் காருக்கு பெரிதாக சேதம் எதுவும் இல்லை. ஆனால் சேதம் இருந்தது. கார் விபத்தை ஏற்படுத்திய பிறகு நிற்கவில்லை, பின்னால் வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டது. கார், இறந்தவர் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது மோதியதால் கீழே விழுந்துவிட்டார். விபத்து சமயத்தில் இறந்தவர் ஓட்டி சென்ற வாகனத்திற்கு பின்னால் கார் வந்தது. காரும், இரு சக்கர வாகனமும் விபத்து சமயத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓட்டி வந்த வாகன ஓட்டுநர்களுக்கு இடது பக்கம் சாலையில் வந்தது. கார் மோதிய பிறகு ஒரு 100 மீட்டர் தள்ளி நின்றது. அதை நான் பார்த்தேன். கார் இடது ஓரமாகவே நின்று விட்டது. இறந்துபோன பாலசுப்பிரமணியனும், பைக்கும் கார் மோதியதாக சொல்லப்பட்ட பிறகு 4 அடி இடைவெளியில் சாலையில் விழுந்து கிடந்தார். விபத்திற்கு பின்னிட்டு

ஆம்புலன்ஸ் மூலமாக உடுமலைபேட்டை அரசு மருத்துவமனைக்கு காயமுற்றவரை எடுத்து வந்தோம், அவர் இறந்து விட்டதாக மருத்துவமனையில் சொன்னார்கள். விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் எவ்வகையிலும் சம்பந்தப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு உடன் சென்றதாக என்னுடைய முதல் விசாரணையில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை, மனுதாரர் எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் கார் வேகமாக வந்திருந்து விபத்தை ஏற்படுத்தியிருந்தால் அதற்கு அதிக சேதம் ஏற்பட்டிருக்கும் என்றும், அவ்வாறு வராத காரணத்தினால் தான் காருக்கு சேதம் இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு கார் காரணம் என்று எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் இறந்துபோன பாலசுப்பிரமணியம் மேற்கிலிருந்து கிழக்காக விபத்து சமயத்தில் சென்றதாக சொல்லியுள்ளேன். அப்போது நான் சம்பவ இடத்தில் எங்கு இருந்தேன் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மனுதாரர் சொல்லியதை தான் நான் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் சம்பவ இடத்திற்கு கிழக்கு பக்கம் இருந்தேன். விபத்து நடந்த இடத்திலிருந்து சத்தம் கேட்டு தான் பார்த்தேன் என்றால் சரிதான். நான் விபத்தை பார்க்கவில்லை, மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. லாரி இறந்தவர் மீது ஏறியதால் தான் அவர் இறந்தார் என்றால் சரிதான்.

<u>6ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

விபத்து இரவு சுமார் 7.15 மணிக்கு நடந்தது. சம்பவ சமயத்தில் சம்பவ இடத்திலிருந்து 50 மீட்டர் தொலைவில் இருந்தேன். நான் நின்று கொண்டிருந்த இடத்திற்கு எதிர்த்தார் போல் சம்பவம் நடந்தது. நான் சம்பவ சமயத்தில் டீக்கடையில் டீ சாப்பிடுவதற்காக நின்று கொண்டிருந்தேன். விபத்து சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. விபத்தில் காயமுற்ற நபர் பாலசுப்பிரமணியம். விபத்தில் முதலில் கார் தான் காயமுற்றவர் சென்ற வாகனத்தை இடித்தது. மேற்படி கார் இன்னோவா கார் ஆகும். முதலில் இன்னோவா கார் இடித்து தான் பாலசுப்பிரமணியம் கீழே விழுந்தார் என்றால் சரிதான். இன்னோவா கார் இடித்த பிறகு தான் பின்னால் லாரி வந்தது என்றால் சரிதான். இனனோவா கார் மோதாமல் இருந்திருந்தால் இந்த விபத்தே ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரிதான். இன்னோவா கார் மோதியதால் மட்டும் தான் பாலசுப்பிரமணியம் விபத்துக்குள்ளாகி இறந்தார் என்றால் சரியல்ல. லாரியினால் விபத்து ஏற்படவில்லை, மேற்படி இறந்த பாலசுப்பிரமணியன் மீது லாரி மோதவே இல்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் பாலசுப்பிரமணியன் தலைக்கவசம் அணியவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை என்று சாட்சி கூறுகிறார். மேற்படி இறந்துபோன பாலசுப்பிரமணியம் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி எவ்வித சமிக்ஞையும் செய்யாமல் வலதுபுறமாக வாகனத்தை திருப்பியதால் இன்னோவா கார் ஓட்டுநர் வாகனத்தை அதிவேகமகாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து பாலசுப்பிரமணியம் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து இரவு நேரம் என்பதால், நான் விபத்தை பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு இறந்துபோன நபரும், 1ம் எதிர்மனுதாரரும் தான் காரணம் என்றால் சரியல்ல. 6ம் எதிர்மனுதாரர்

வாகனம் பெரிய வாகனம் என்பதால் காயமுற்ற குடும்பத்தாருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 6ம் எதிர்மனுதாரரை தவறாக குற்ற வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. விபத்திற்கு 4ம் எதிர்மனுதாரர் காரணமில்லை என்பதால் 6ம் எதிர்மனுதாரரான காப்பீடு நிறுவனம் இழப்பீடு செலுத்த கடமைபட்டவரல்ல என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை, நான் பொய்யாக மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.